# PANCHAYAT UNION MIDDLE SCHOOL

# PERIYANUR PUDHUPETTAI

# PALACODE BLOCK

## NMMS 8-ம் வகுப்பு சமூகஅறிவியல்.. பருவம் – 2

புதிய பாடத்திட்டம் வினாக்கள்..

www.Padasalai.Net

Prepared by..

R.ANAND KUMAR

B.T Asst (English)

Mobile - **9787970370**

# NMMS – 8ம் வகுப்பு சமூகஅறிவியல் புதிய பாடத்திட்டம்

## இந்தியாவில் கல்வி வளர்ச்சி

1. மனிதனின் மூன்றாம் கண் எனப்படுவது எது ? அறிவு
2. பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது எங்கு உள்ளது ? பாகிஸ்தான்
3. அர்த்த சாஸ்திரத்தை தொகுத்து வழங்கியவர் யார் ? சாணக்கியர்
4. தட்சசீலம் பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை கண்டறிந்த தொல்பொருள் ஆய்வாளர் எவர் ? அலெக்சாண்டர் கன்னிங்காம்
5. யுவான் சுவாங் எந்த நாட்டு அறிஞர் ஆவார் ? - சீனா
6. பண்டைய காலத்தில் தோன்றிய புகழ்பெற்ற கல்வி மையங்கள் எவை ?
நாளந்தா, விக்ரமசீலா, தட்சசீலம், வல்லபி, ஓடண்டாபுரி, ஜகத்தாலா
7. உலகின் பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்று இது ? - நாளந்தா பல்கலைக்கழகம்
8. நாளந்தா பல்கலைக்கழகம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது ? - பீகார்
9. முஸ்லிம்கள் ஏற்படுத்திய தொடக்கப்பள்ளிகளுக்கு பெயர் என்ன ? - மக்தப்
10. முஸ்லிம்கள் ஏற்படுத்திய இடைநிலைப் பள்ளிகள் பெயர் என்ன ? - மதரசா பள்ளிகள்
11. டெல்லியில் ஒரு மதரஸா பள்ளியை நிறுவிய முதல் ஆட்சியாளர் யார் ? - இல்துத்மிஷ்
12. அறிவியல் பாடங்களின் கட்டளை வைத்தவர் யார் ? - ராஜா ஜெய்சிங்- ஜெய்ப்பூர்
13. கியாசுதீன் மதரசா எங்கு உள்ளது ? - டெல்லி
14. மவுலானா சதுருதீன் மதரசா உள்ள இடம் எது ? - ஷாஜகானாபாத்
15. கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட ஸ்ரீரங்கம் மடத்தின் பெயர் ? - அஹோபில மடம்
16. இந்தியாவில் யாருடைய வருகை மேற்கத்திய கல்வி முறையை பரவலாக்கியது ? -ஐரோப்பியர்கள்
17. இந்தியாவில் நவீன கல்வி முறையை தொடங்கிய அவர்களில் முதன்மையானவர்?
- போர்ச்சுகீசியர்கள்
18. இந்தியாவில் முதல் கல்லூரி எந்த ஆண்டு எங்கு தொடங்கப்பட்டது ? - 1575 - கோவா
18. கொச்சியில் பல்கலைக்கழகம் எந்த போர்ச்சுகீசியர் ஆல் துவங்கப்பட்டது ? - பிரான்சிஸ் சேவியர்
19. தரங்கம்பாடியில் 20 இலவசப் பள்ளிகளை நிறுவியவர் யார் ? 1812 - டாக்டர் C.S. ஜான்
20. வட்டார மொழியில் கல்வியை கற்பித்த ஐரோப்பியர்கள் யார் ? - பிரெஞ்சுக்காரர்கள்
21. கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய இரண்டு ஜெர்மன் பிஷப்புகள் ? - சீகன்பால்கு , புளுட்ச்சோ
22. முதன்முதலாக சமஸ்கிருத கல்லூரிகள் துவங்கப்பட்ட இடங்கள் எவை ? - மதராஸ் & பனாரஸ்
23. கொல்கத்தாவில் புகழ்பெற்ற பிஷப் கல்லூரியை துவங்கியவர் யார் ? - பிஷப் டாக்டர் மிடில்டன்
24. வட்டார மொழி கல்வியினை தீவிரமாக ஆதரித்தவர் யார் ? - மவுண்ட்ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன்
25. 1813 - பட்டய சட்டத்தின் படி இந்தியாவில் கல்வியை மேம்படுத்த எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ? ஒரு லட்சம் ரூபாய்
26. இந்தியாவில் நவீன கல்வி முறையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ? - மெக்காலே பிரபு
27. மெக்காலேவின் குறிப்புகள் எந்த ஆண்டு வெளிவந்தன ? 1835
28. உட்ஸ் கல்வி அறிக்கை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது ? 1854
29. ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம் என்று அழைக்கப்படுவது எது ? உட்ஸ் கல்வி அறிக்கை
30. எந்த கல்வி குழு தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது ? ஹண்டர் கல்விக்குழு 1882

By - R.ANAND KUMAR., B.T.Asst., PUMS., P.PUDHUPETTAI., PALACODE BLOCK., 9787970370

31. சார்ஜெண்ட் கல்வி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆண்டு எது ?- 1944
32. வார்தா கல்வித் திட்டத்தை உருவாக்கியவர் யார் ? காந்தியடிகள் - 1937
33. பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கையை தயாரிக்க அமைக்கப்பட்ட குழு எது ?டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்வி குழு - 1948
34. டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்விக்குழுவின் பரிந்துரையின் படி உயர் கல்வியின் தரத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு எது ? பல்கலைக்கழக மானியக் குழு
35. எந்த கல்வி குழு 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச தொடக்கக் கல்வியை தர பரிந்துரை செய்தது ? டாக்டர் கோத்தாரி கல்வி குழு - 1964
36. நாடு முழுவதும் ஒரே மாதிரியான _____________ கல்வி அமைப்பை கோத்தாரி கல்விக்குழு பரிந்துரை செய்தது.. 10+2+3
37. தேசிய கல்வி கொள்கை உருவாக்கப்பட்ட ஆண்டு எது ? 1968
38. புதிய தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்ட ஆண்டு ? 1986
39. எந்த ஆண்டு புதிய கல்விக் கொள்கை திருத்தி அமைக்கப்பட்டது ? 1992
40. எந்த ஆண்டு கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது ? 1976
41. கட்டாய கல்வி சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது ? 2009
42. கல்வி உரிமை சட்டத்தின்படி எந்த வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்க வேண்டும் ? 6 முதல் 14 வயது வரை
43. அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டம் RMSAஎந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் கொண்டுவரப்பட்டது ? பதினோராம் ஐந்தாண்டு திட்டம்
44. **கல்வித் திட்டங்கள்**

SSA - சர்வ சிக்ஷா அபியான்

RMSA - ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான்

SmSA - சமக்ர சிக்ஷா அபியான் திட்டம்

45. தற்போது நடைமுறையில் உள்ள மத்திய கல்வி திட்டம் எது ? சமக்ர சிக்ஷா திட்டம்
46. மத்தியில் எந்த அமைச்சகத்தின் கீழ் கல்வி துறை செயல்படுகிறது ? மனிதவள மேம்பாட்டுத்துறை
47. பண்டைய இந்தியாவில் ஆசிரியர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ? கணக்காயர்
48. தமிழகத்தில் யாருடைய ஆட்சி காலத்தில் கல்வி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்தது ? பல்லவர்கள்
49. பல்லவர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன ? கடிகை
50. யுவான் சுவாங் குறிப்புகளில் காணப்படும் தமிழக நகரம் எது ? காஞ்சிபுரம்
51. தமிழ் இலக்கிய வரலாற்றில் அறிவார்ந்த புதுமைகளை புகுத்திய காலம் எது ? சோழர்கள் காலம்
52. தமிழ்நாட்டில் புகழ்பெற்ற வேத கல்லூரிகள் அமைந்த இடம் ?

    ராஜராஜன் சதுர்வேதிமங்கலம், திருபுவனை

53. யாருடைய கல்வெட்டு மருத்துவப் பள்ளி பற்றி குறிப்பிடுகிறது ?

    வீரராஜேந்திர சோழன் திருவாடுதுறை கல்வெட்டு

54. தமிழ்நாட்டில் சமஸ்கிருதத்தை ஆதரித்தவர்கள் யார் ? பாண்டிய மன்னர்கள்
55. யாருடைய ஆட்சிக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டது ? நாயக்கர்கள்
56. தஞ்சையில் அமைந்துள்ள நூலகத்தின் பெயர் என்ன ? சரஸ்வதி மஹால்
57. தஞ்சாவூரில் தேவநாகரி எழுத்து முறை நான் அச்சுக்கூடத்தை அமைத்தவர் யார் ? இரண்டாம் சரபோஜி
58. மதராஸ் மாகாணத்தில் மேற்கத்திய கல்வியை அறிமுகப் படுத்தியவர் ? சர் தாமஸ் மன்றோ

By - R.ANAND KUMAR., B.T.Asst., PUMS., P.PUDHUPETTAI., PALACODE BLOCK., 9787970370

59. சென்னை பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ? 1857
60. உள்ளூர் வாரியச் சட்டம் எப்போது நிறைவேற்றப்பட்டது ? 1882.
61. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எந்த ஆண்டு துவங்கப்பட்டது ? 1929
62. தமிழகத்தில் காந்திகிராம கிராமிய கல்லூரி எப்போது ஏற்படுத்தப்பட்டது ? 1975
63. தமிழகத்தில் சத்துணவு திட்டம் எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது ? 1982
64. வேதம் என்ற சொல் ________ இல் இருந்து வந்தது. - சமஸ்கிருதம்
65. தட்சசீலம் யுனெஸ்கோ அமைப்பினால் உலக பாரம்பரிய தளமாக எப்போது அறிவிக்கப்பட்டது ? 1980
66. பள்ளிகளில் மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது ? 1956

## இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

1. பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா என்று குறிப்பிட்டவர் யார் ? எட்வேர்ட் பெயின்ஸ்
2. உலோக காலத்துக்கு பெயர் பெற்ற இந்திய நகரம் எது ? சௌராஷ்டிரா
3. தகர தொழிற்சாலைக்கு புகழ்பெற்ற பகுதி ? வங்காளம்
4. மஸ்லின் ஆடைகளுக்கு புகழ்பெற்றப் பகுதி எது ? டாக்கா
5. மம்மிகள் எதைக்கொண்டு சுற்றப்பட்டு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ? மஸ்லின் ஆடைகள்
6. மம்மிகள் எந்த நாட்டு கல்லறைகளில் பதப்படுத்தப்பட்டுள்ளன? எகிப்து
7. இந்தியாவின் பழமையான தொழில் ___________ ஆகும். - நெசவு தொழில்
8. எந்த நாட்டின் சந்தையாக இந்தியா மாறியது ? பிரிட்டன்
9. செல்வ சுரண்டல் கோட்பாடு யாரால் வெளியிடப்பட்டது ? தாதாபாய் நௌரோஜி
10. அசாம் தேயிலை நிறுவனம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது ? 1839
11. இந்தியாவில் துவங்கப்பட்ட தொழிற்சாலைகள் விபரம்
    - 1854 - பருத்தி நூற்பு ஆலை - பம்பாய்
    - 1855 - சனல் தொழிற்சாலை - கல்கத்தா பள்ளத்தாக்கு ரிஷ்ரா
    - 1870 - காகித தொழிற்சாலை - பாலிகன்ஜ் கல்கத்தா
    - 1874 - எஃகு தொழிற்சாலை - குல்டி
    - 1907 - டாட்டா இரும்பு எஃகு நிறுவனம் - ஜாம்ஷெட்பூர்
12. எந்த ஆற்றங்கரையில் சனல் ஆலைகள் அதிகரித்தன ? ஹூக்ளி
13. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் எந்த பகுதியில் முக்கியத்துவம் பெற்றன ? கான்பூர்
14. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு எந்த ஆண்டு நிறுவப்பட்டது ? 1985
15. தொழில்துறை எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன ? மூன்று வகைகள்
    - வேளாண்மை அடிப்படையிலான தொழிற்சாலைகள்
    - கனிம அடிப்படையிலான தொழிற்சாலைகள்
    - மூலப்பொருட்கள் அடிப்படையிலான தொழிற்சாலைகள்



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

# 3. இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

1. இடம் பெயர்வுக்கான காரணிகள்




| இழு காரணிகள் (Pull Factors) | உந்து காரணிகள் (Push Factors) |
|---|---|
| **இயற்கை காரணிகள்** | |
| இடர் குறைவாக உள்ள மண்டலங்கள் | இடர் பாதிக்கும் மண்டலங்கள் |
| உகந்த காலநிலை | காலநிலை மாறுபாடு (கடுமையான காலநிலை நிகழ்வுகள்) |
| இயற்கை வளங்கள் மற்றும் கனிமங்கள் மிகுந்த பகுதிகள் (எடுத்துக்காட்டு: நீர், எண்ணெய், யுரேனியம்) | விளைச்சல் பொய்த்தல் மற்றும் உணவு பற்றாக்குறை |
| **பொருளாதாரக் காரணிகள்** | |
| வேலைவாய்ப்பிற்கேற்ற சூழல்கள் | வேலையின்மை |
| **சமூக மற்றும் பண்பாட்டுக் காரணிகள்** | |
| ஒருங்கிணைப்பு | குடும்ப முரண்பாடு (பூசல்கள்) |
| **மக்கள் தொகை காரணிகள்** | |
| குறைவான மக்கள் தொகை | மிகை மக்கள் தொகை பெருக்கம் |
| **அரசியல் காரணிகள்** | |
| அரசியல் பாதுகாப்பு | போர், சமூக உரிமைகள், அமைதியின்மை |
| தனித்துவம் மற்றும், சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு | பாதுகாப்பு சார்ந்தவை – இனம், மதம் மற்றும் கலாச்சார துன்புறுத்தல் |
| குறைந்த செலவு, எளிதில் கிடைக்கும் நகர்ப்புற சேவைகள் (சுகாதாரம், கல்வி, பயன்பாடுகள், போக்குவரத்து மற்றும் நீர்) | குறைவான அல்லது பற்றாக்குறையான நகர்ப்புற சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதி (சுகாதாரம், கல்வி, பயன்பாடுகள் மற்றும் போக்குவரத்து) |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

2. சர்வதேச புலம்பெயர்ந்தோர் அறிக்கை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது ? 2017

3. உலக மக்கள் தொகை பங்கு மற்றும் சர்வதேச இடம்பெயர்வு

| மண்டலத்தின் பெயர் | மொத்த மக்கள் தொகை | உலக மக்கள் தொகையில் சதவீதம் | சர்வதேச அளவில் புலம் பெயர்ந்தோர் | சர்வதேச புலம் பெயர்ந்தோர் சதவீதம் |
|---|---|---|---|---|
| ஆப்பிரிக்கா | 12,56,268 | 16.6% | 36,266 | 14.1% |
| ஆசியா | 45,04,428 | 59.7% | 1,05,684 | 41% |
| ஐரோப்பா | 7,42,074 | 9.8% | 61,191 | 23.7% |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 6,45,593 | 8.6% | 37,720 | 14.6% |
| வட அமெரிக்கா | 3,61,208 | 4.8% | 4,413 | 1.7% |
| ஓசியானியா | 40,691 | 0.5% | 1,880 | 0.7% |
| அறியப்படாதவை | -- | -- | 10,560 | 4.1 |
| உலகம் | 75,50,262 | 100% | 2,57,715 | 100% |

4. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை ________ ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது . 2017

5. சர்வதேச புலம்பெயர் வில் முன்னிலை வகிக்கும் நாடு எது ? இந்தியா

6. சர்வதேச புலம்பெயர்ந்தோர் அறிக்கையின்படி இந்தியாவில் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ? 17 மில்லியன்

7. இந்தியாவுக்கு அடுத்த நிலையில் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை கொண்ட நாடு ? மெக்ஸிகோ 13 மில்லியன்

8. உலக அளவில் புலம் பெயர்வோர் எண்ணிக்கை

2000 - 173 மில்லியன்

2010 - 220 மில்லியன்

2017 - 258 மில்லியன்

9. உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு எது ? 2018

10. எந்த ஆண்டு உலக அளவில் நகர்ப்புற மக்கள்தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகமானது ? 2007

11. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் தோன்றிய நகரங்கள்

மெசபடோமியா - உர் மற்றும் பாபிலோன்
எகிப்து - தீப்ஸ் மற்றும் அலெக்சாந்திரியா
கிரேக்கம் - ஏதென்ஸ்
இந்தியா - ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ

12. 1950 ல் உலக மக்கள் தொகையில் ________ சதவீதம் நகர மக்கள் தொகையாகும். 30%

13. 2050 ல் உலக மக்கள் தொகையில் ________ சதவீதம் நகர மக்கள் தொகையாக இருக்கும். 68%

By - R.ANAND KUMAR., B.T.Asst., PUMS., P.PUDHUPETTAI., PALACODE BLOCK ., 9787970370

14. உலக அளவில் நகர மக்கள் தொகை

| உலக நகரமயமாக்கல் | | |
|---|---|---|
| வ. எண் | கண்டங்கள் | நகர மக்கள் தொகை (%) |
| 1 | வட அமெரிக்கா | 82 |
| 2 | இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகள் | 81 |
| 3 | ஐரோப்பா | 74 |
| 4 | ஓசியானியா | 68 |
| 5 | ஆசியா | 50 |
| 6 | ஆப்பிரிக்கா | 43 |
| **உலக சராசரி** | | 55 |

| அதிக மக்கள் தொகை கொண்ட உலகின் முதல் ஐந்து மாநகரங்கள் | |
|---|---|
| மாநகரத்தின் பெயர் | மக்கள் தொகை (மில்லியனில் ) |
| 1. டோக்கியோ (ஜப்பான்) | 37 |
| 2. புது தில்லி (இந்தியா) | 29 |
| 3. சாங்காய் ( சீனா) | 26 |
| 4. மெக்சிகோ நகரம் (மெக்சிகோ) | 22 |
| 5. சா பாலோ (பிரேசில்) | 22 |

15. அதிக மக்கள்தொகை கொண்ட உலகின் ஐந்து மாநகரங்கள்

16. நகரமயமாதலுக்கு முக்கிய காரணம் எது ? உணவு தானிய உற்பத்தி.

## இடர்கள்

1. மனித உயிர்கள் மற்றும் உடமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் நிகழ்வுகள் _______ எனப்படும். இடர்கள்

2. ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வு ________ . பேரிடர்

3. மிகப் பெரிய இழப்பையும் அதிக செலவின் அத்தையும் உண்டாக்குவது ____________ . பேரழிவு

4. இடர்களை எத்தனை பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் ? மூன்று

5. இயற்கையால் ஏற்படும் பேரிடர்கள் - நில அதிர்வு ,வெள்ளப்பெருக்கு, சூறாவளி ,புயல் ,வறட்சி, நில சரிவு ,சுனாமி மற்றும் எரிமலை.

6. மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள் – குண்டுவெடிப்புகள், கழிவுகள் ,காற்று நீர் நிலம் மாசு , அணைக்கட்டு உடைதல்,உள்நாட்டுக் கலவரங்கள் ,தீவிரவாத செயல்கள்,,,...

7. சமூக இயற்கை இடர்கள் - மரங்களை அழித்தல், சுரங்கங்கள் தூண்டுதல், கனிமங்கள் வெட்டி எடுத்தல் ,சதுப்பு நிலக்காடுகள் அழித்தல்

8. பூமியின் மேலோட்டில் திடீரென ஏற்படும் கடும் அதிர்வு இது - நில அதிர்வு

9. இந்தியாவில் எத்தனை நில அதிர்வு மண்டலங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன ? ஐந்து

10. இந்தியாவின் எந்த நிலப்பகுதியும் ___________ மண்டலத்தின் கீழ் வகைப் படுத்தப் படவில்லை. , மண்டலம் 1

11. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் எங்கு உள்ளது ? புதுடெல்லி



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

12. இந்தியாவின் நில அதிர்வு மண்டலங்கள்

| நில அதிர்வு மண்டலங்கள் | அபாயத்தன்மை | பகுதிகள் |
|---|---|---|
| மண்டலம் 5 | மிக அதிகம் | வடகிழக்கு இந்தியா முழுமையும், ஜம்மு காஷ்மிரின் சில பகுதிகள், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், குஜராத்தின் ரான் ஆப் கட்ச், வட பீகார் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுக் கூட்டங்கள் |
| மண்டலம் 4 | அதிகம் | ஜம்மு–காஷ்மீரின் பிற பகுதிகள், இமாச்சலப்பிரதேசம் தேசிய தலைநகரமான புது டெல்லி, வட உத்திரப் பிரதேசம், பீகார், சிக்கிம், மேற்கு வங்கம், குஜராத்தின் சில பகுதிகள், மேற்கு கடற்கரையை ஒட்டி உள்ள மகாராஷ்டிராவின் சில பகுதிகள் மற்றும் இராஜஸ்தான் |
| மண்டலம் 3 | மிதமானது | கேரளா, கோவா, இலட்சத்தீவுகள், உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள், குஜராத் மற்றும் மேற்கு வங்காளம், பஞ்சாபின் சில பகுதிகள், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா |
| மண்டலம் 2 | குறைவு | நாட்டின் பிற பகுதிகள் |

13. இந்தியாவில் அதிகமாக வெள்ளம் பாதிக்கும் பகுதிகள் - பஞ்சாப் ,அரியானா, உத்தரப்பிரதேசம் , பீகார், மேற்கு வங்காளத்தில் கங்கை சமவெளி மற்றும் பிரமபுத்திரா பள்ளத்தாக்கு, கடலோர ஆந்திரம் , ஒடிசா, குஜராத்....

14. தேசிய நீரியியல் நிறுவனம் எங்கு செயல்படுகிறது ? புதுடெல்லி

15. வெப்ப மண்டல சூறாவளிகள் காரணமாக திடீரென ஏற்படும் கடல்நீர் எழுச்சியை ______________ என்கிறோம். புயல் அலை.

16. நம் நாட்டில் மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் _________யினால் பாதிக்கப்படுகின்றன. வறட்சி

17. இந்தியாவில் எத்தனை சதவீத நிலப்பரப்பு வறட்சியால் பாதிக்கப்படுகிறது ? 16%

18. இந்தியாவில் எத்தனை சதவீதம் மக்கள் தொகை வரட்சியால் கடுமையாக பாதிக்கிறது ? 12%

19. வறட்சியில் ஒரு பகுதி பெரும் மழைப்பொழிவின் அளவு என்ன ? 60 சென்டிமீட்டர்

20. இந்தியாவில் எத்தனை சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகிறது ? 15%

21. தமிழ்நாட்டில் அதிகமாக நிலச்சரிவால் பாதிக்கப்படும் பகுதிகள் எவை ?
கொடைக்கானல் ,உதகமண்டலம்

22. சுனாமி என்ற வார்த்தை ____________ மொழி சொல் ஆகும். ஜப்பானிய மொழி

23. இந்தியப் பெருங்கடலில் எந்த ஆண்டு எப்போது சுனாமி ஏற்பட்டது ? .
டிசம்பர் 26, 2004 ஆம் ஆண்டு காலை 7.59 மணிக்கு

24. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் அளவுகோல் என்ன ? 9.1 ரிக்டர் அளவுகோல்



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

25. உலகின் மிகப்பெரிய அணு உலை விபத்து எப்போது எங்கு நடைபெற்றது ?
1986 ஏப்ரல் 26 செர்னோபில்
26. ஜப்பான் மீது எந்த ஆண்டு அணுகுண்டு வீசப்பட்டது ? 1945
27. காற்றிலுள்ள வாயுக்களின் அளவு
நைட்ரஜன் - 78.09%
ஆக்சிஜன் - 20.95%
கார்பன்-டை-ஆக்சைடு - 0.03%
28. ஒரு மூலத்தில் இருந்து நேரடியாக வெளியேற்றப்படும் மாசு ___________ எனப்படும்.
முதன்மை மாசுபடுத்திகள்
29. நேரடியாக வெளியேறாமல் முதன்மை மாசுபடுத்திகள் வளிமண்டலத்தில் வினை புரிவதால் உருவாக்குவது __________ ஆகும். இரண்டாம் நிலை மாசுபடுத்திகள்
30. முதன்மை மாசுபடுத்திகள் எவை ?
சல்பர் டை ஆக்சைடு
நைட்ரஜன் ஆக்சைடு
கார்பன் டை ஆக்சைட்
துகள்ம பொருட்கள்

## சமய சார்பின்மையை புரிந்து கொள்ளுதல்

1. இந்தியா ஒரே தேசிய கண்ணோட்டத்தை கொண்டிருக்கும் எனக் கூறியவர் யார் ? ஜவகர்லால் நேரு
2. அரசு என்பது எந்த ஒரு மதத்தையும் சார்ந்து இருக்கக் கூடாது என முதலில் அறிவித்த அரசர் யார் ? அசோகர்
3. நாம் அனைவரும் இந்தியர்கள் இந்தியா நமது வீடு என்பது யாருடைய கூற்று ? கவிஞர் இக்பால்
4. (Secularism) செக்யூலரிஸம் என்ற சொல்லை உருவாக்கியவர் யார் ? ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக்
5. கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் இருப்பது - ஆத்திகம்
6. இந்திய அரசியலமைப்பின் எந்த சட்ட திருத்தத்தின் மூலம் சமயசார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது ? 42ம் திருத்தம் 1976
7. <u>அரசியலமைப்பு பிரிவுகளின் அடித்தளம்</u>

**பிரிவு 15 :** சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடுத்துவதை தடை செய்கிறது.

**பிரிவு 16 :** பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.

**பிரிவு 25 (1) :** எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது.

**பிரிவு 26 :** சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்

**பிரிவு 27 :** எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்தவொரு குடிமகனையும் வரிசெலுத்துமாறு வற்புறுத்தக் கூடாது.

**பிரிவு 28 :** சில கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை.

**பிரிவு 29 (2):** அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாடுபாடு காட்ட தடை.

By - R.ANAND KUMAR., B.T.Asst., PUMS., P.PUDHUPETTAI., PALACODE BLOCK ., 9787970370

8. அக்பரின் கல்லறை எங்கு உள்ளது ? சிக்கந்தரா
9. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு ? 1976
10. அக்பர் உருவாக்கிய மதத்தின் பெயர் என்ன ? தீன் -இலாஹி
11. தீன் - இலாஹி என்பதன் பொருள் என்ன ? தெய்வீக நம்பிக்கை..

## மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

1. ... மனித உரிமைகளை பாதுகாக்கும் உலகளாவிய சட்டங்கள்
    மகாசாசனம் இங்கிலாந்து - 1215
    உரிமை மனு இங்கிலாந்து - 1628
    ஆங்கில உரிமைகள் மசோதா - 1689
    ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் - 1679
    குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்சின் அறிவிப்பு - 1789
    அமெரிக்க அரசியலமைப்பு சட்டம் - 1791
2. ஐக்கிய நாடுகள் சபை எப்போது உருவாக்கப்பட்டது ? 1945 அக்டோபர் 24
3. ஐக்கிய நாடுகள் சபையின் சாசன சட்டம் எந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது ? சான்பிரான்சிஸ்கோ மாநாடு 1945
4. உலக மனித உரிமைகள் தினம் என்று கொண்டாடப்படுகிறது ? டிசம்பர் 10
5. உலக மனித உரிமைகள் அறிவிப்பு எப்போது வெளியிடப்பட்டது ? 1948
6. தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் எப்போது உருவாக்கப்பட்டது ? 1993 அக்டோபர் 12
7. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமை அலுவலகம் எங்கு அமைந்துள்ளது ? புதுடெல்லி
8. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரை நியமிப்பது யார் ? குடியரசுத் தலைவர்
9. தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் எங்கு உள்ளது ? சென்னை
10. மாநில மனித உரிமைகள் ஆணையம் எப்போது துவங்கப்பட்டது ? 1997 ஏப்ரல் 17
11. குழந்தைகளுக்கான இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் பிரிவுகள்
    கல்வி உரிமைச் சட்டம் 2009
    குழந்தை தொழிலாளர் சட்டம் 1986
    சிறார் நீதிச் சட்டம் 2000
    போக்சோ சட்டம் 2012

**இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்**

பிரிவு 24 – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது.

பிரிவு 39 (f) – ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச்செய்கிறது.

பிரிவு 45 – 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

www.Padasalai.Net

12. குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான அறிக்கை எப்போது வெளியிடப்பட்டது ? 1989 நவம்பர் 20
13. ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் படி எந்த வயது வரை உள்ள அனைவரும் குழந்தைகள் ? 18
14. சர்வதேச பெண்கள் ஆண்டு எது ? 1978
15. எந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டாக ஐநா சபை அறிவித்தது ? 1979
16. குழந்தைகளுக்கான உதவி மையம் என்ன ? 1098
17. நான்காவது உலக மகளிர் மாநாடு எங்கு எப்போது நடைபெற்றது ? 1995 - பெய்ஜிங்
18. குழந்தைகளுக்காக செயல்படும் ஐநா சபையின் துணை அமைப்பு இது ? UNICEF யுனிசெப்
19. பெண்கள் உரிமைகளுக்காக செயல்படும் ஐநா சபையின் துணை அமைப்பு எது ? UNIFEM யூனிபெம்
20. பெண்கள் பாதுகாப்புக்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்களும் விதிகளும்..

| சட்டங்கள் | விதிகள் |
|---|---|
| இந்து விதவை மறுமணச் சட்டம், 1856 | விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கியது. |
| இந்து திருமணச் சட்டம், 1955 | பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கியது. |
| இந்து வாரிசு சட்டம், 1956 | பெண்கள் தங்கள் பெற்றோர்களின் சொத்தினை மரபுவழியாக பெறுவதை உறுதிசெய்கிறது. |
| வரதட்சணைத் தடைச் சட்டம், 1961 | வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்கு கடுமையான தண்டனை வழங்குகிறது. |
| பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச் சட்டம், 1997 | பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. |
| அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999 | பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது. |
| தொழிற்சாலைச் சட்டம், 1948<br>தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951<br>சுரங்கச் சட்டம், 1952<br>மகப்பேறு நலச் சட்டம், 1961 | பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது. |
| வன்கொடுமை தடுப்பு சட்டம், 2005 | கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது. |

# ALL THE BEST

By - R.ANAND KUMAR., B.T.Asst., PUMS., P.PUDHUPETTAI., PALACODE BLOCK ., 9787970370

www.Padasalai.Net